27.02.2026.

OS.77/2024

PW1- அஜித்குமார்– த/பெ தங்கசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.02.2026.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன்.

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளமோ படித்துள்ளேன்.

3. ஆங்கிலத்தில் உள்ளதை எழுதி படித்து புரிந்து கொள்ளும் திறமை உண்டா என்றால் உண்டு.

4. 1,2 வாதிகளும், பிரதிவாதியையும் எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 2ம் வாதி 18 வருடமாக பழக்கம். மற்ற இருவரும் 8 வருடமாக பழக்கம்.

5. 1,2 வாதிகளும், பிரதிவாதியும் என்ன உறவு முறை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

6. 2ம் வாதியும் பிரதிவாதியும் எதன் அடிப்படையில் எதன் அடிப்படையில் தெரிந்துகொண்டேன் என்றால் 1ம் வாதி பிரதிவாதிக்கு நிலம் வாங்கி விற்பது சம்மந்தமாக தெரிந்துகொண்டார்கள்.

7. இடம் வாங்கி விற்பது சம்மந்தமாக தெரிந்துகொண்டார்கள் என்ற விவரம் 1ம் வாதி கூறிதான் எனக்கு தெரியும் நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். இந்த விவரங்களை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

8. பிரதிவாதி அவரது தாயார் அவரது சகோதரர்கள் 1996 ம் வருடம் தபசில் சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். இந்த விவரம் 2018 ம் வருடம் தெரியும் என்றால் சரிதான்.

9. 1,2 வாதிகள் என்ன வேலை செய்கிறார்கள்,என்ன பண வசதி கொண்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல எனக்குத் தெரியும். இந்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 1ம் வாதியுடன் பழக்கம் ஏற்பட்ட பின் தெரியும்.

10. 2ம் வாதி எங்கு செங்கல் சூளை வைத்துள்ளார், என்ன பெயரில் வைத்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இந்த விவரத்தை நான் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான்.

11. 1ம் வாதி பிரதிவாதியுடன் நண்பர்கள் என்ற விவரம் எனக்கு 2018 ம் வருடம் தான் தெரியும் என்றால் சரிதான்.

12. 2018 ம் வருடம் தான் நான் வழக்கு சொத்தை பார்வையிட்டேன் என்றால் இல்லை அதற்கு முன்பே பார்வையிட்டேன். இந்த விவரத்தை நான் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான்.

13. 1996 முதல் 2018 வரை பிரதிவாதி அவரது தாயார் மற்றும் சகோதரர் செங்கல்சூளை வைக்கவில்லை என்றால் சரிதான்.

14. பிரதிவாதி அவரது தாயார் மற்றும் சகோதரர் எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல நான் படித்து பார்த்தேன்.

15. பொது அதிகாரம் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல எனக்குத் தெரியும்.

16. பொது அதிகார ஆவணத்தில் தபசில் சொத்தில் செங்கல்சூளை நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

17. நான் பிராதில் தவறாக வேண்டுமென்றே தபசில் சொத்தில் செங்கல்சூளை வைக்க அனுமதி அளித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

18. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 40 லட்சம் முதலீடு செய்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த விவரத்தை நான் பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல நான் கூறியுள்ளேன்.

19. 2019ம் வருடம் பிரதிவாதி என் மீது அ.வ.68/2019 வழக்கில் இதே தபசில் சொத்தில் அவரின் அனுபவத்தை இடையூறு செய்வதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

20. பிரதிவாதியின் தாயாரும், சகோதரரும் அ.வ.68/2019 வழக்கை தாக்கல் செய்வதற்கு பொது அதிகாரம் வழங்கவில்லை என்ற காரணத்தினால் அ.வ.68/2019 வழக்கு திரும்ப பெறப்பட்டது என்றால் சரிதான்.

21. தபசில் சொத்தில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்தில் கண்காணிப்பு கேமராவை நான் உடைத்து வேலியை சேதம் செய்ததாக என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் குற்ற வழக்கு உள்ளது ஆனால் அது என்னை வெளியேற்றுவதற்காக கொடுக்கப்பட்ட புகாராகும்.

22. தபசில் சொத்தில் செங்கல்சூளை வைத்து எந்த தொழிலும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

23. என்ன நிறுவனத்தின் பேரில் செங்கல்சூளை தயாரித்து வருகிறேன் என்றால் PMT என்ற பெயரில் ஆரம்பித்தோம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் உரிமை சான்று விண்ணப்பிக்கக்கோரி தாக்கல் செய்த விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளேன்.

24. PMT என்ற பெயரில் தற்போது செங்கல்சூளை நடைபெறவில்லை என்றால் சரிதான்.

25. பிராது தபசில் சொத்தில் தற்போது மா மரம், நெல்லிக்காய் மரம் ஆகியவை உள்ளது என்றால் சரிதான் அதை நாங்கள் தான்

வைத்துள்ளோம். நாங்கள் தான் வைத்துள்ளோம் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எந்த ஆவணமும் இல்லை.

26. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

27. தபசில் சொத்தின் அனுபவத்தில் நான் இல்லாததால் நான் தாக்கல் செய்த வழக்கு பிரதிவாதி செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் 2019 ம் வருடமே பிரதிவாதி அவருடைய அனுபவத்தில் சொத்து உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அதில் எதிர்கோரிக்கை நான் தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு முன் தீர்ப்பு கோட்பாட்டின் படி தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி